அவர்களுக்காகத் தந்திருக்கிறோம். 90 சதவீதம் நம்முடைய கொள்கை அடிப்படையில்தான் அங்கே அனுமதி அளிக்கப் படுகிறது. ஆகவே ஏறக்குறைய இவைகள் எல்லாம் அரசாங்கத்தினுடைய பெருமளவு கட்டுப்பாட்டில்தான் இருந்து வருகின்றன. சீர்காழி பாலிடெக்னிக்கைப் பொறுத்தவரையில் அதன் பிரச்சினையை அரசு தனியாகக் கவனித்து அதற்கான தீர்வை காணும்.

திரு. இரா. கருப்பையா: திருச்சியில் பெண்களுக்கென பாலிடெக்னிக்கில் ஒரு தனிப்பிரிவு இந்த ஆண்டு ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது பற்றிய விவரம் என்னிடம் இல்லை. அது குறித்து ஆராய்வோம்.

திருநெல்வேலி-பாபநாசம் மின் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலை.

*வினா எண் 655—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதிக்குட்பட்ட பாபநாசம் லோயர் கேம்பில் இருக்கும் மின்தொழிலாளர்களுக்காக நடைபெறும் கூட்டுறவு பண்டகசாலையில் சுமார் ரூ. 32 ஆயிரத்துக்கு மேல் கையாடல் நடைபெற்றுள்ளதென்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது?

(இ) அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) பண்டகசாலையில் 1977—78-ல் ரூ. 1202.41-ம், 1978—79-ல் ரூ. 3533.53-ம் ஆக மொத்தம் ரூ. 4735.94 கையாடல் செய்யப்பட்டிருப்பதாகக் கூட்டுறவுச் சட்டப்பிரிவு 65-ன் கீழ் நடந்த விசாரணையின் போது தெரியவந்தது.

(ஆ) பண்டகசாலையின் கணக்கர் திரு. பி. ஆவுடையப்பன் என்பவரும், பாபநாசம் மின் திட்ட கோட்டப் பொறியாளர் அலுவலக காசாளர் திரு. கே. கணபதி என்பவரும் இக் கையாடலில் சம்பந்தப்பட்டுள்ளனர் என்றும், கடன் விற்பனை தொகை வசூலை முழுவதுமாக பண்டகசாலைக் கணக்கில் வரவு வைக்காது, கையாடல் செய்திருப்பதாகவும் விசாரணை அலுவலர் தெரிவித்துள்ளார்.

(இ) பண்டகசாலைச் செயலாளரின் முறையீடு தமிழ்நாடு மின்வாரிய ஊழியர்களின் கோரிக்கை மற்றும் மாவட்ட கூட்டுறவு தனி அலுவலரின் சிறப்பு அறிக்கையின் பேரில் இது விஷயமாக கூட்டுறவுச் சட்டப்பிரிவு 65-ன் கீழ் விசாரணைக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு சிறப்பு விசாரணைக் குழுவால் விசாரணை செய்யப்பட்டு, விசாரணை அறிக்கையின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, ரூபாய் வித்தியாசமே தவிர, கையாடல் ஏற்பட்டிருக்கின்றது என்பது உண்மை. தொழிலாளர்கள் சம்பளத்திலிருந்து பிடிக்கப்பட்ட பணம் சரிவர கணக்கில் வரவு வைக்கப்படவில்லை. அதன்காரணமாக, அவர்கள் சரியான முறையிலே சாமான்கள் வாங்கமுடியாமல், இன்னும் பல குறைபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால், அந்த கூட்டுறவுக்கு மின்சார வாரியத்தினுடைய ஒரு என்ஜினியர்தான் தலைவர். அவருக்கும் இதிலே உடன் பாடு இருப்பதாக குற்றச்சாட்டிருப்பதாக எனக்குத் தகவல், அந்த என்ஜினீயர் இதிலே உடன்பட்டுள்ளாரா? அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் திட்ட வட்டாரப் பொறியாளர் இதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார் என்பதற்கு ஆதாரம் கிட்ட வில்லை. ஆனால், மின்சார வாரியத்தினுடைய காசாளர் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று தெரிய வந்தது. அவர் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தக் கையாடல் சம்பந்த மாக 65-வது பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாக, இதில் அவர்மீது, பணம் வசூலிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அதோடு அவர்மீது கிரிமினல் வழக்கு தொடரப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறைப்படி 65-வது விதியின்படி என்கொயரி நடந்து அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பணம் வசூலிப்பதுடன், கிரிமினல் நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆழ்துளை கிணறுகள் வெட்டக் கடன்.

வினா எண் 656—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் விவசாயத்திற்கென விவசாயிகளுக்கு போர்வெல் போடுவதற்கு நிலவள வங்கிகள் மூலம் கடன் கொடுக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தற்சமயம் ஏதுமில்லை.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்சமயம் ஏதுமில்லை என்று சொன்னார்கள். ஆனால், இன்றைய நிலையில் அந்தப் பகுதி கடுமையான வறட்சியாலும், பஞ்சத்தாலும் பதிக்கப்பட்டு இருக்கிறது. ஜனங்கள் அத்தனைபேரும் வெளியே சென்று கொண்டிருக்கிறார்கள் அந்தச் சூழ்நிலையில் குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாத நிலையில், அந்தப் பகுதியில் போர்வெல் போட்டு, அதன் மூலமாக விவசாயத்திற்கும் குடிப்பதற்கு குடிநீரும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கிணறுகளைத் தோண்டுதல், இருக்கின்ற கிணறுகளை ஆழப் படுத்துதல், விசையேற்றுதல் போன்ற பணிகளுக்கு தாராளமாக நிதி உதவி தந்து, அப் பணிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. துளைக் கிணறுகளைப் பொறுத்தவரை சற்று பிரச்சினை இருக்கிறது.